RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

DOI: 10.54392/ijot2614

# Social Values and Ethical Life in the Pathinenkilkanakku Literature

**M. Venkatesan [a, *], D. Karthikeyan [a]**

[a] Department of Tamil, Government Arts and Science College, Ariyalur-621713, Tamil Nadu, India

*Corresponding author Email: arrowvenkat@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2614

Received: 30-12-2025; Revised: 16-02-2026; Accepted: 20-02-2026; Published: 27-02-2026

**Abstract:** The Pathinenkilkanakku texts occupy a distinctive position within the tradition of Tamil ethical literature. Their ethical vision extends beyond individual morality and emphasizes the broader social consequences of individual actions within the family, community, society, and the wider world. Accordingly, these texts present ethical conduct as a foundation for harmonious social life and collective well-being. Values such as love, generosity, hospitality, sharing food, maintaining harmonious relationships with relatives and the community, mutual assistance, and alleviating the suffering of others are presented as essential forms of social virtue. This study examines the concept of social ethics (Samuthaya Aram) articulated in the ethical works of the Pathinenkilkanakku corpus. It focuses on the ways in which these texts connect individual conduct with social responsibility and collective welfare. Particular attention is given to ethical practices that promote compassion, reciprocity, social cohesion, mutual support, and concern for others. The study further analyses how the ethical principles represented in these works contribute to the formation of harmonious interpersonal and community relationships. The findings indicate that the Pathinenkilkanakku tradition presents morality not merely as a matter of personal discipline but as a socially oriented ethical framework in which individual actions carry consequences for the well-being of others. Thus, the social ethical thought embedded in these texts demonstrates the significance of love, generosity, hospitality, sharing, mutual responsibility, and humanitarian concern in shaping a balanced and harmonious society.

**Keywords:** Pathinenkilkanakku, Social Values, Social values, Harmonious Relationships, Community Relationships

# ஆசாரக்கோவையில் வாழ்வியல் கூறுகள்

**ம. வெங்கடேசன் [அ, *], த. கார்த்திகேயன் [அ]**

[அ] தமிழாய்வுத்துறை, அரசு கலைக் கல்லூரி, அரியலூர்-621713, தமிழ்நாடு, இந்தியா

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் அற இலக்கியங்கள் மனித வாழ்வை நெறிப்படுத்தும் முக்கியப் பணியை மேற்கொண்டுள்ளன. குறிப்பாக பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அக்காலச் சமூகத்தில் நிலவிய பல்வேறு ஒழுக்கக்குறைகளைச் சுட்டிக்காட்டி, அவற்றைக் களைவதற்கான அறநெறிகளை முன்வைக்கின்றன. தனிமனிதன் அறத்தைப் பின்பற்றி வாழ்வதன் மூலம் தன்னையும் தான் வாழும் சமூகத்தையும் செம்மைப்படுத்த முடியும் என்ற கருத்து இந்நூல்களின் அடிப்படையாக அமைகிறது. மனிதர்கள் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துதல், பிறருடைய துன்பத்தைத் தம்முடைய துன்பமாகக் கருதி உதவுதல், விருந்தினரைப் போற்றுதல், செல்வத்தைப் பகிர்ந்து கொள்ளுதல், உறவுகளைப் பேணுதல், கைம்மாறு எதிர்பாராமல் உதவுதல் போன்ற பண்புகள் நல்ல சமுதாயத்தின் அடிப்படைப் பண்புகளாகக் கருதப்படுகின்றன. இவ்வகையில் தனிமனித அறம் சமூக அறமாக விரிவடைகிறது.

## சமுதாயம்

தனிமனிதன் பிறரோடு கலந்து பழகி, கூடி வாழும் வாழ்க்கை முறையே சமுதாயமாகும். ‘சமூகம்’, ‘சமுதாயம்’ ஆகிய இரு சொற்களும் ஒருபொருளைக் குறிக்கும் நிலையில் பயன்படுகின்றன. மக்கள் பலர் ஒன்றுகூடி வாழும் இனக்குழுவே சமுதாயம் எனப்படுகிறது.

'சமுதாயம்' என்ற சொல்லில் இடம்பெறும் 'தாயம்' என்பதற்கு 'உரிமை' என்று தமிழ்மொழி அகராதி பொருள் தருகிறது. இதனை நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி சுட்டுகிறது. (கதிரவேற் பிள்ளை, நா. 1992) எனவே, சமுதாயம் என்பது வெறுமனே மக்கள் கூட்டமாக அமைவது அன்று; பொதுவான உரிமைகளையும் நலன்களையும் பகிர்ந்து கொண்டு சமத்துவத்துடன் வாழும் அமைப்பாகவும் கருதலாம்.

## இலக்கியமும் சமுதாயமும்

இலக்கியம் மனித வாழ்விலிருந்து பிரிக்க முடியாதது. சமூகத்தில் நிலவும் நிகழ்வுகள், மதிப்பீடுகள், ஒழுக்கங்கள், முரண்பாடுகள், எதிர்பார்ப்புகள் ஆகியவை பல்வேறு வடிவங்களில் இலக்கியங்களில் பதிவாகின்றன. காலந்தோறும் இலக்கியங்களின் வெளிப்பாட்டு முறை மாறினாலும், மனித வாழ்வை நோக்கிய அதன் அடிப்படை அக்கறை தொடர்ந்து காணப்படுகிறது.

"சமூகச் சக்திகளின் தாக்கத்தால் மனிதன் எவ்வாறு செயப்படுகின்றான் என்பதைக் கண்டறிய உதவும் சமுதாய அளவுகோல்" என இலக்கியத்தை மு. வரதராசன் குறிப்பிடுகிறார் (Varatharasan, 2019). இதன் அடிப்படையில் இலக்கியத்தைச் சமூகத்தின் பிரதிபலிப்பாக மட்டுமன்றி, சமூகத்தை நெறிப்படுத்தும் ஆற்றல் கொண்ட கருவியாகவும் பார்க்க முடிகிறது.

## சமுதாய அறம்

அறம் என்பது தனிமனித வாழ்வின் ஒழுக்கத்தைக் குறிப்பதோடு, சமூக வாழ்வின் ஒழுங்கையும் குறிக்கிறது. தனிமனிதன் தனது மேம்பாட்டிற்காக மேற்கொள்ளும் அறச்செயல்கள் இறுதியில் சமூக மேம்பாட்டிற்கும் வழிவகுக்கின்றன. இதனை வே. முத்துலக்குமி,

"தனிமனிதன் தனது மேம்பாட்டுக்காகச் செய்யும் அறம் தனிமனித அறம் ஆகும். தனிமனிதர்கள் செய்யும் அறங்கள் இறுதியில் சமுதாய மேம்பாட்டுக்கு வழிவகுக்கின்றன." என்று விளக்குகிறார் (Muthulakkumi, 1999).

எனவே தனிமனித அறம், சமுதாய அறம் என இருவகைப்படுத்துவது கருத்தின் வேறுபாட்டைக் காட்டுவதற்காக அன்று; நடைமுறையின் அடிப்படையில் அறத்தின் செயல்பாட்டை விளக்குவதற்காகவே ஆகும். தனிமனிதனுக்குக் கூறப்படும் பெரும்பாலான அறநெறிகள் சமூகத்திற்கும் பொருந்துகின்றன.

## உலகியல் வாழ்வும் சமுதாய அறமும்

தனிமனிதன் → குடும்பம் → சமூகம் → உலகம் என்ற வளர்ச்சிநிலை மனித வாழ்வின் சமூகத் தொடர்பை விளக்குகிறது. தனிமனிதனின் ஒழுக்கம் குடும்பத்தைப் பாதிக்கிறது; குடும்பத்தின் ஒழுக்கம் சமூகத்தைப் பாதிக்கிறது; சமூகத்தின் ஒழுக்கம் உலக வாழ்வியலோடு தொடர்பு பெறுகிறது.

பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்கள் தனிமனிதனின் ஒழுக்கம் முதல் குடும்பம், சுற்றம், சமூகம் ஆகியவற்றின் நலன் வரையிலான பல்வேறு அறங்களை எடுத்துரைக்கின்றன. இவ்வறங்களுள் விருந்தோம்பல், ஈகை, பகுத்துண்ணுதல், சுற்றம் தழுவுதல், ஒப்புரவு ஆகியவை சமூக உறவுகளை வலுப்படுத்தும் அடிப்படை அறங்களாக விளங்குகின்றன.

## விருந்தோம்பல் அறம்

இல்லற வாழ்வின் சிறந்த பண்புகளில் ஒன்றாக விருந்தோம்பல் கருதப்படுகிறது. பண்டைத் தமிழர் விருந்தினரை வரவேற்பதை வெறும் சமூக வழக்கமாகக் கருதாமல், உயர்ந்த அறமாகக் கருதினர். தம்வீட்டிற்கு புதிதாக வருபவர்களை வரவேற்று, அவர்களுக்குத் தேவையானவற்றை வழங்கி, அன்புடன் உபசரிப்பதே விருந்தோம்பலாகும்.

ஆசாரக்கோவை விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று, தண்ணீர் கொடுத்து, அமர இடம் அளித்து, உணவு மற்றும் உறங்குவதற்கான வசதிகளைச் செய்வதைச் சிறப்பித்துரைக்கிறது:

"முறுவலனிதுரை கானீர் மணைபாய் பிடக்கையோ டிவ்வைந்து மென்ப

தலைச்சென்றார்க் கூனொடு செய்யுஞ் சிறப்பு" – *ஆசாரக்கோவை*, பா.54. (Gowmareeswari, 2009)

இதன் வழியாக விருந்தோம்பல் என்பது உணவளிப்பதை மட்டும் குறிக்காமல், இன்சொல், அன்பு, மரியாதை, இடமளித்தல், உடல் தேவைகளை நிறைவு செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய முழுமையான சமூக அறமாக இருந்தமை புலப்படுகிறது.

திருவள்ளுவரும் இல்லற வாழ்க்கையின் நோக்கங்களில் விருந்தோம்பலுக்கு முக்கிய இடம் அளிக்கிறார்:

“இருந்து ஓம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்து ஓம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு.”– *திருக்குறள்.* (Parimelalhagar, 1962)

விருந்தோம்பலின் சிறப்பு சங்க இலக்கியங்களிலும் காணப்படுகிறது. இரவு நேரத்திலும் விருந்தினர் வந்தால் அவர்களை வரவேற்கும் பண்பு இருந்ததை நற்றிணை எடுத்துரைக்கிறது:

“அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்

முல்லை சான்ற கற்பின் மெல்லியல் குறுமகன்.”

அதேபோல், இரவு நேரத்தில் கதவை அடைப்பதற்கு முன்னர் வெளியிலிருந்து யாரேனும் விருந்தினராக வருகிறார்களா என்று விசாரிக்கும் பழக்கம் குறுந்தொகையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் விருந்தோம்பல் அன்றைய சமூக வாழ்வில் ஆழமாகப் பதிந்திருந்தமை தெளிவாகிறது.

வறுமையிலும் விருந்தோம்பலைக் கைவிடாத பண்பும் பண்டைத் தமிழரிடம் காணப்பட்டது. விருந்தினர்களுக்கு உணவளிக்கத் தன்னிடம் பொருள் இல்லாத நிலையில் ஒருவர் தன் வாளையும் பின்னர் யாழையும் பணயம் வைத்த நிகழ்வு புறநானூற்றில் இடம்பெறுகிறது (புறம்.316). இதன் மூலம் விருந்தோம்பல் பொருளாதார வசதியைப் பொறுத்ததன்று; சமூகக் கடமையாகக் கருதப்பட்டமை வெளிப்படுகிறது.

தொல்காப்பியரும் புதிதாக வருபவர்களை ஓம்புதலை ‘விருந்து’ என்ற கருத்தின் அடிப்படையில் குறிப்பிடுகிறார்:

“விருந்தே தானும் புதுவது கிளந்த

யாப்பின் மேற்றே.” – *தொல்காப்பியர், 1975).* (Tholkapiyar, 1975)

இதிலிருந்து விருந்தோம்பல் சாதி, மதம், கருத்து வேறுபாடு போன்ற பாகுபாடுகளைத் தாண்டிய மனிதநேயப் பண்பாகப் புரிந்துகொள்ளப்படுகிறது.

**ஈகை - சமூக நலத்தின் அடிப்படை**

சமுதாய வாழ்வில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் காணப்படும் நிலையில், செல்வம் உடையவர்கள் வறியோருக்கு உதவுதல் சமூகப் பொறுப்பாகக் கருதப்படுகிறது. பிறரின் வறுமையைப் போக்குவது தனிப்பட்ட கருணைச் செயல் மட்டுமன்று; அது சமூகக் கடமையாகவும் அறமாகவும் விளங்குகிறது.

திருவள்ளுவர்,

“வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்

குறியெதிர்ப்பை நீர துடைத்து.” – *திருக்குறள்*, 221.

என்று குறிப்பிடுகிறார் (Parimelalhagar, 1962). இதன் மூலம் கைம்மாறு எதிர்பார்க்காமல் வறியோருக்கு வழங்குவதே உண்மையான ஈகை என வலியுறுத்தப்படுகிறது.

பண்டைத் தமிழரிடம் உதவி நாடி வருபவர்களின் தேவையை அவர்கள் சொல்லுவதற்கு முன்னரே உணர்ந்து உதவும் பண்பு இருந்ததாகப் பரிபாடல் குறிப்பிடுகிறது:

“இல்லது நோக்கி இளிவரவு கூறாமுன்

நல்லது வெஃகி வினைசெய்வார்.” – *பரிபாடல்*, பா.43. (Puliyur Kesigan, 2009)

இவ்வாறு பிறரின் தேவையை உணர்ந்து உதவுதல் சமூகத்தில் இரக்கத்தையும் மனிதநேயத்தையும் வளர்க்கிறது.

## பகுத்துண்ணும் பண்பு

இல்லறத்தின் உயிர்நாடியாகப் பகுத்துண்டு வாழ்தல் கருதப்படுகிறது. ஒருவர் ஈட்டிய பொருளைத் தனக்காக மட்டும் வைத்துக் கொள்ளாமல், பிறரோடு பகிர்ந்து கொள்வது சமூக ஒற்றுமையை உருவாக்கும் முக்கிய அறமாகும்.

மணிமேகலை,

“அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்

மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்

உண்டியும் உடையும் உறையுளும் அல்லது

கண்டதில்."

என்று உயிர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதே அறத்தின் முக்கிய நோக்கமாகக் காட்டுகிறது.

திருவள்ளுவரும்,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை." – *திருக்குறள்*, 322. (Parimelalhagar, 1962)

என்று பகுத்துண்ணுதலை அனைத்து அறங்களிலும் முதன்மையானதாகக் குறிப்பிடுகிறார்.

உணவளித்தல் உயிரளித்தலுக்கு ஒப்பானது என்ற கருத்தும் புறநானூற்றில் வலியுறுத்தப்படுகிறது:

"உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே."– *புறநானூறு*, பா.78. (Puliyur Kesigan, 2009)

எனவே உணவு பகிர்தல் என்பது தனிமனித இரக்கச் செயல் மட்டுமன்று; பசியின்மையை நோக்கிய சமூகப் பொறுப்பாகவும் விளங்குகிறது.

விருந்தினரிடம் இன்சொல் பேசுதல், இடமளித்தல், உணவு வழங்குதல், கடுஞ்சொல்லைத் தவிர்த்தல் ஆகியவற்றையும் ஏலாதி விருந்தோம்பலின் கூறுகளாக எடுத்துரைக்கிறது:

"இன்சொல் அளாவல் இடம்இனிது யாவர்க்கும்

வன்சொற் களைந்து வகுப்பானேல்..." – *ஏலாதி*, பா.7. (Gowmareeswari, 2009)

இதன் மூலம் பகுத்துண்ணுதல் என்பது உணவைப் பகிர்தல் மட்டுமன்றி, இன்சொல் மற்றும் அன்பையும் பகிர்தலாக விரிவடைகிறது.

## சுற்றம் தழுவி வாழ்தல்

சமுதாய வாழ்வின் மற்றொரு முக்கிய அறமாகச் சுற்றம் தழுவி வாழ்தல் அமைகிறது. உறவினர்கள், நண்பர்கள், சுற்றத்தார் ஆகியோரைப் பேணிப் பாதுகாப்பது சமூக உறவுகளை நிலைநிறுத்துகிறது.

நாலடியார் இதனை மரத்தின் நிழலுக்கும் பழத்திற்கும் உவமையாகக் காட்டுகிறது:

"அழன்மண்டு போழ்தின் அடைந்தவர் கட்கெல்லாம்

நிழன்மரம் போல் நேரொப்பத் தாங்கிப்-பழமரம்

போற் பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே

நல்லாண் மகற்குக் கடன்." – *நாலடியார்*, பா.202. (Gowmareeswari, 2009)

மரம் தன்னை நாடி வருபவர்களுக்கு நிழலும் பழமும் வழங்குவது போல, செல்வம் உடையவன் தன்னைச் சார்ந்தவர்களின் துன்பத்தைப் போக்கி வாழ வேண்டும் என்ற சமூகக் கருத்து இங்கு வலியுறுத்தப்படுகிறது.

திருவள்ளுவர்,

"சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் செல்வம்தான்

பெற்றதால் பெற்ற பயன்."– *திருக்குறள்*, 524. (Parimelalhagar, 1962)

என்று செல்வத்தின் உண்மையான பயன் சுற்றத்தாருடன் இணைந்து வாழ்வதில்தான் உள்ளது என்கிறார்.

பழமொழி நானூறும் தம்மை நாடி வரும் ஒருவரின் துன்பத்தைப் போக்கி வாழ்வதே நல்வாழ்க்கை எனக் குறிப்பிடுகிறது. இதனால் உறவுமுறை என்பது இரத்த உறவை மட்டும் அடிப்படையாகக் கொண்டதன்று; பிறருடைய துன்பத்தில் துணைநிற்கும் மனிதநேய உறவாகவும் விரிவடைகிறது.

உறவுகள் இல்லாத இல்லற வாழ்க்கை முழுமையானதாக அமையாது என்பதையும் இன்னா நாற்பது,

"பந்தமில்லாத மனையின் வனப்பின்னா."– *இன்னா நாற்பது*, பா.1. (Gowmareeswari, 2009) என்று குறிப்பிடுகிறது.

## ஒப்புரவு அறிதல்

'ஒப்புரவு' என்பது பிறருக்கு உதவியாக இருத்தல், சமூக நலனில் பங்கெடுத்தல், பிறருடைய துன்பத்தை உணர்ந்து அதைப் போக்குதல் ஆகியவற்றைக் குறிக்கிறது. தனிமனிதன் தன்னலம், தன் குடும்பம், தன் செல்வம் ஆகியவற்றில் மட்டும் கவனம் செலுத்தாமல், சமூகத்தின் நல்வாழ்வையும் விரும்ப வேண்டும் என்பது அற இலக்கியங்களின் நோக்கமாகும்.

திருவள்ளுவர் ஒப்புரவின் உயர்வை மழைக்கு ஒப்பிடுகிறார். மழை கைம்மாறு எதிர்பாராமல் உலகிற்கு நீரை வழங்குவது போல, மனிதனும் எந்தப் பயனையும் எதிர்பார்க்காமல் பிறருக்கு உதவ வேண்டும்:

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு

என்.ஆற்றும் கொல்வோ உலகு."– *திருக்குறள்*, 211. (Parimelalhagar, 1962)

இதனால் ஒப்புரவு என்பது பரஸ்பரப் பயன் கருதிய உதவி அன்று; சமூகப் பொறுப்புணர்விலிருந்து உருவாகும் தன்னலமற்ற செயல் என்பது தெளிவாகிறது.

பிறருடைய துன்பத்தைத் தன்னுடைய துன்பமாக உணர்ந்து உதவுதல் மனித வாழ்வின் அடையாளமாகக் கருதப்படுகிறது:

"ஒத்தது அறிவாள் உயிர்வாழ்வான் மற்றையான்

செத்தாருள் வைக்கப் படும்." – *திருக்குறள்*, 213. (Parimelalhagar, 1962)

இதன் வழியாக பிறரின் துயரத்தை உணரும் திறனே மனிதநேயத்தின் அடிப்படையாகிறது.

## பிறர்நலம் பேணுதல்

சிறுபஞ்சமூலம் நோயுற்றவர்களின் துன்பத்தைப் போக்குவோரின் சிறப்பைப் பேசுகிறது. பிறருடைய உடல் துன்பத்தை நீக்குதல் சமூக அறமாகக் கருதப்படுகிறது.

ஏலாதியும் நோயால் துன்புறுவோருக்கு உதவுவோர் அரசர்களைப் போல் மக்களால் பாராட்டப்படுவர் என்று குறிப்பிடுகிறது. இதன் மூலம் சமூக நலப் பணிகளில் ஈடுபடுவோருக்கு வழங்கப்பட்ட மதிப்பை அறிய முடிகிறது.

அதேபோல் வறிய மாணவர்களுக்கு உணவு, உடை, எழுத்தாணி, புத்தகம் போன்ற கல்விக்குத் தேவையான பொருட்களை வழங்குதல் உயர்ந்த அறமாக ஏலாதியில் குறிப்பிடப்படுகிறது:

"ஊணொடு கூறை எழுத்தாணி புத்தகம்

பேணெடும் எண்ணும் எழுத்தினை..."– *ஏலாதி*, பா.83. (Gowmareeswari, 2009)

இதன் வழியாக கல்வி வாய்ப்பை வழங்குதலும் சமூக அறத்தின் ஓர் அங்கமாக இருந்தமை புலப்படுகிறது. உடல் நலம், உணவு, உடை போன்ற அடிப்படைத் தேவைகளோடு கல்வியும் சமூக நலத்தின் முக்கிய கூறாகக் கருதப்படுகிறது.

## சமூக ஒற்றுமையும் மனிதநேயமும்

பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்கள் முன்வைக்கும் விருந்தோம்பல், ஈகை, பகுத்துண்ணுதல், சுற்றம் தழுவுதல், ஒப்புரவு போன்ற அறங்கள் தனித்தனி பண்புகளாகத் தோன்றினாலும், அவை அனைத்தும் ஒரே சமூகக் குறிக்கோளை நோக்கிச் செல்கின்றன. அது மனிதர்களிடையே அன்பு, பரிவு, ஒற்றுமை, சமத்துவம் ஆகியவற்றை வளர்த்தல் என்பதாகும். விருந்தோம்பல் பிறரை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையை உருவாக்குகிறது. ஈகை பொருளாதார ஏற்றத்தாழ்வின் தீவிரத்தைத் தணிக்கிறது. பகுத்துண்ணுதல் செல்வத்தின் சமமான பயன்பாட்டை வலியுறுத்துகிறது. சுற்றம் தழுவுதல் சமூக உறவுகளைப் பாதுகாக்கிறது. ஒப்புரவு பிறரின் துன்பத்தை உணர்ந்து உதவும் மனிதநேயத்தை வளர்க்கிறது. இவ்வறங்கள் அனைத்தும் இணைந்து செயல்படும்போது தனிமனித மையத்திலிருந்து சமூக மையத்தை நோக்கிய வாழ்வியல் உருவாகிறது.

## முடிவுரை

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இடம்பெறும் அறக்கருத்துகள் தனிமனித வாழ்வை மட்டுமே நெறிப்படுத்துவன அல்ல; அவை சமூக வாழ்வைச் செம்மைப்படுத்தும் நோக்கத்தையும் கொண்டுள்ளன. தனிமனிதன் அறநெறியோடு வாழும்போது குடும்பம் செம்மையடைகிறது; குடும்பம் செம்மையடையும்போது சமூகம் நலம்பெறுகிறது. எனவே தனிமனித அறமும் சமுதாய அறமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாகவே விளங்குகின்றன. விருந்தோம்பல், ஈகை, பகுத்துண்ணுதல், சுற்றம் தழுவி வாழ்தல், ஒப்புரவு, பிறர்துயர் போக்குதல் ஆகிய அறங்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் சமூக வாழ்வின் அடிப்படை நெறிகளாக முன்வைக்கப்படுகின்றன. செல்வம் தனிமனிதனின் அனுபவத்திற்காக மட்டுமே அன்று; அது பிறருடைய துன்பத்தைப் போக்குவதற்கும் பயன்பட வேண்டும் என்ற கருத்து இந்நூல்களில் வலியுறுத்தப்படுகிறது. இன்றைய சமூகத்திலும் பொருளாதார ஏற்றத்தாழ்வு, தனிமனித மையப்போக்கு, உறவுகளின் சிதைவு, பிறர்துயர் குறித்த அக்கறையின்மை போன்ற நிலைகள் காணப்படும் சூழலில், இவ்வறநெறிகள் சமூகப் பொறுப்புணர்வை வளர்ப்பதற்கான அடிப்படைக் கருத்துகளாக அமையக்கூடியவை. எனவே பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் சமுதாய அறக்கருத்துகள் காலங்கடந்த மனிதநேய மதிப்புகளைக் கொண்டவை என்பது இவ்வாய்வின் வழியாகப் புலப்படுகிறது.

## References


Gowmareeswari, S. (2009) Pathinenkeezhkanakku Noolgal Moolamum Uraiyum, Saratha Pathipagam, Chennai

Kathirver Pillai, N. (1992) Tamil Moliyagarathi, Asiya Kalvi Sevai, Chennai, India

Muthulakkumi, V. (1999) Pandai Tamil Ilakaiayankalil Ara Nerikal, Anitha Pahtipagam, Trichy.

Parimelalhagar (1962) Thirukural, Uma Pathipagam, Chennai, India

Puliyur Kesigan (2009) Paripadal Moolamum Uraiyu, Saratha Pathipagem, Chennai, India

Sihambaranar, S. (1936) Manimekalai, Gobalakrishana Kon, Madurai

Tholkapiyar, (1975) Porulathikaram, Tamil department, Madurai Kamarajar University, Madurai

Varatharasan, M. (2019) Ilakiya Marabu, Pari Nilayam, Chennai, India.


### Conflict of interest

The Author’s have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

### About the License

© The Author(s) 2026. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

### Cite this Article

M. Venkatesan, D. Karthikeyan, Social Values and Ethical Life in the Pathinenkilkanakku Literature, Indian Journal of Tamil, 7(1), (2026) 21-26. https://doi.org/10.54392/ijot2614